IT&D | e-GOV | FID | PROC
ELCOT
CH 18 JAN 2007 MD
37
HR | ACCTS | SECTL | OTHERS

சுருக்கம்

நிலம் – மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டம் – கிண்ணிமங்கலம் கிராமம் புல எண்.209, 210 மற்றும் 211 முதலியவற்றில் 16.02.5 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத அரசு புஞ்சை தரிசு நிலத்தை தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க 'எல்காட்' நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்(நி.மு–7)துறை

அரசாணை(நிலை) எண்.14 நாள். 9.1.2007

1. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். ஒய்–1/101325/06, நாள். 28.11.2006.
2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரின் கடித எண். பி2/37051/06, நாள். 8.12.2006

ஆணை :

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராம புல எண்கள் 209,210 (ம) 211 புலங்களில் 16.02.5 ஹெக்டேர் நிலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு, தமிழ்நாடு மின்னணு கழகம் நில உரிமை மாற்றம் கோரியது என மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இந்நேர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார். மேற்கண்ட புலங்கள் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களாகும். மேற்கண்ட புலங்களை, தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில்கொண்டு, 10.10.2006–ல் தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள புலங்கள் விபரம் வருமாறு–

| புல எண் | விஸ்தீரணம் | பாகுபாடு | குறிப்பு |
|---|---|---|---|
| 209 | 7.48.0 | அரசு தீர்வை ஏற்படாத தரிசு | பாறை |
| 210 | 4.77.5 | அரசு தீர்வை ஏற்படாத தரிசு | பாறை |
| 211 | 3.77.0 | அரசு தீர்வை ஏற்படாத தரிசு | பாறையும் வண்டிப்பாதையும் |
| மொத்த விஸ்தீரணம் | 16.02.5 ஹெக்டேர்ஸ் அல்லது 39.58 ஏக்கர்ஸ் | | |

மேற்கண்ட புலன்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. பிரஸ்தாப புலங்களில் கோவில்கள், கட்டிடங்கள், மரங்கள், மின்கம்பங்கள், புராதனச் சின்னங்கள் ஏதுமில்லை. புல எண்.211–இன் வடகிழக்கு மூலையில் வண்டிப்பாதை செல்கிறது. பிரஸ்தாப புலங்களை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு கிராமத்தில் 'ஏ' நோட்டீஸ் விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை. மேற்கண்ட புலங்களை, தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை என பொதுமக்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். மேற்கண்ட புலங்களை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு, நிலமாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை என கிண்ணிமங்கலம் ஊராட்சியில் தீர்மானம் எண். 8/06–07ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரஸ்தாப புலங்களை தமிழ்நாடு

மின்னணு கழகத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்வதற்கு, நிலமதிப்பு நிர்ணயம் செய்வதற்கு, அரசு வழிகாட்டி மதிப்பு பரிசீலனை செய்யப்பட்டதில், பிரஸ்தாப புலங்களுக்கு சென்ட் 1-க்கு ரூ.110/- எனக் குறிப்பிட்டுள்ளது. பிரஸ்தாப புலங்களை சுற்றி, 1.6 கி.மீ. சுற்றளவில் 2003 முதல் 2006 ஏற்பட்ட விற்பனைப் புள்ளி விவரங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிரஸ்தாபப் புலத்திற்கு அருகில் உள்ள புல எண். 195/6A-இல் 54 சென்டு நிலம், 195/6II-இல் 4 சென்டு நிலம் மற்றும் 195/8A-இல் 12 சென்டு நிலம் ஆக மொத்தம் 70 சென்டு நிலம் ரூ.24,500/- என்ற நில மதிப்பில் கிரைய பத்திர எண். 731, நாள் 30.7.2003ன்படி விற்பனையாகியுள்ளது. மேற்கண்ட விற்பனையின்படி சென்ட் ஒன்றுக்கு ரூ.350/- மதிப்பாகிறது. அரசு வழிகாட்டிப் பதிவேட்டின் மதிப்பை விட, மேற்கண்ட விற்பனையின் நிலமதிப்பு அதிகமாக உள்ளதாலும், மேற்கண்ட விற்பனை உண்மை நிலமதிப்பை பிரதிபலிப்பதாக உள்ளதாலும், இந்த விற்பனையின் அடிப்படையில் பிரஸ்தாப புலங்களுக்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்யலாம். அதன்படி நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள 39.58 ஏக்கர் நிலத்திற்கு கீழ்க்கண்டவாறு நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(1) விற்பனை புள்ளிவிவர அடிப்படையில் 1 சென்ட் விலை ரூ.350/-

(2) ஒரு ஏக்கரின் விலை ரூ.350 x 10 = ரூ.35,000

(3) 39.58 ஏக்கர் x ரூ.35,000/- ரூ.13,85,300/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து முந்நூறு மட்டும்)

மேற்கண்ட நிலமதிப்பை கோரிக்கைத் துறையினரிடம் வசூல் செய்து கொண்டும், வருவாய் நிலையாணை எண். 24ன் கீழ் உள்ள நிபந்தனைகளுடன், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க, மேற்கண்ட 39.58 ஏக்கர் நிலத்தை, தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்யலாம் என மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

3. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையினை மேலனுப்புகையில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார் :-

அ) பிரஸ்தாப புலம் தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) புல எண்.211-இன் வழியே வடகிழக்கு மூலையில் வண்டிப்பாதை செல்லுகிறது.

இ) இப்புலத்திற்கான விற்பனைப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் நிலமதிப்பாக சென்ட் ஒன்றுக்கு ரூ.350/- என நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்த நிலமதிப்பாக (விஸ்தீரணம் 16.02.5 ஹெக்டேர்ஸ் அல்லது 39.58 ஏக்கர் அல்லது 3958 சென்ட்) ரூபாய் 19,46,246/- நிர்ணயம் செய்யலாமென தெரிவித்துள்ளார்.

ஈ) எனவே மதுரை மாவட்ட ஆட்சி தலைவரின் அறிக்கையினை ஏற்று, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் கிண்ணிமங்கலம் கிராமம் புல எண்.209, 210 மற்றும் 211 முதலியவற்றில் 16.02.5 எக்டேர் நிலத்தினை சென்ட் ஒன்றுக்கு ரூ.350/- என நிர்ணயம் செய்து ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு "எல்காட்" நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

4. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.-

அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமம் புல எண்.209, 210 மற்றும் 211 முதலியவற்றில் 16.02.5 எக்டேர் (39.58 ஏக்கர்) விஸ்தீரணமுள்ள நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக்கொண்டு தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பொருட்டு வருவாய் நிலை ஆணை எண்.24-இல் உள்ள வழக்கமான நிபந்தனைகளுடன் "எல்காட்" நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் ;

/து.பி.

ஆ) நிலம் எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறதோ அதற்காக மட்டுமே நிலத்தை பயன்படுத்த வேண்டும் ; மற்றும்

இ) பிரஸ்தாப புலமோ அல்லது ஒரு பகுதியோ தேவையில்லையெனில் அதை வருவாய்த்துறைக்கு மீண்டும் ஒப்படைக்கவேண்டும்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் (ம) நில நிருவாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷயா,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர்,
சென்னை-5
மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம், மதுரை-20
✓மேலாண்மை இயக்குநர்,
எல்காட், சென்னை-600035
<u>நகல்:</u>
செயலர், தகவல் தொழில்நுட்பவியல் துறை, சென்னை-9
செயலர், ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை-9
செயலர், நிதித் துறை, சென்னை-9
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9
அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
அமைச்சர் (வருவாய் (ம) சட்டம்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
செயலர், வருவாய்த் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை-9
இணைச் செயலர்(நி.மு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
இருப்புக்கோப்பு / உதிரிக்கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
9/1/07